OS.No. 80/2022 – 5.2.2025

PW1 – மாது

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிரதிவாதியுடன் தாவா கிரய ஒப்பந்தத்திற்கு முன்னர் எத்தனை கிரய ஒப்பந்தங்கள் செய்துள்ளேன் என்றால் ஒரு கிரய ஒப்பந்தம் செய்தேன். அந்த கிரய ஒப்பந்தத்தில்எவ்வளவு முன் தொகை கொடுத்தேன் என்றால் ரூ,4,00,000/– கொடுத்தேன். அதில் மீதி கிரய தொகை ரூ.1,00,000/– வைத்திருந்தேன். மேற்படி கிரய ஒப்பந்தத்தை எந்த தேதியில் ரத்து செய்தேன் என்றால் தேதி நினைவில்லை. 2021ல் 3வது மாதம் மட்டும் ஞாபகம் உள்ளது. 12.03.2021ல் முதல் கிரய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு தாவா கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரி. மேற்படி கிரய ஒப்பந்த்தை ஏன் ரத்து செய்தேன் என்றால் ஏற்கனவே பேசிக்கொண்ட கிரய தொகை போதவில்லை என்று கூறியதால் மீண்டும் பேசி புதிதாக ஒப்பந்தம் போட்டோம். முதல் கிரய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்த போது நான் மேலே சொன்ன காரணத்தை கூறி உள்ளேனா என்றால் இல்லை.

நான் சொல்வது தவறு என்றும் பிரதிவாதி வாங்கிய கடனுக்கு அடமானப்பத்திரம் எழுதுவதற்கு பதிலாக கிரய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது என்றும், மேலும் கடன் கேட்டதால் மேற்படி முதலில்

எழுதப்பட்ட கிரய ஒப்பந்தத்தை ரத்து செய்து புதிதாக கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல முதல் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள தொகைக்கான வட்டியை சேர்த்து எழுதுவற்காக முதல் ஒப்பந்த பத்திரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 2வது கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டபோது கிரய முன்தொகை ரூ.6,00,000/- கொடுக்கப்பட்டது. இதுவரை பிரதிவாதி எவ்வளவு என்னிடம் வாங்கி உள்ளார் என்றால் ரூ.10,00,000/- வாங்கி உள்ளார். எத்தனை மாதம் வட்டி செலுத்தி உள்ளார் என்றால் நான் வட்டி வாங்கவில்லை. நான் பிரதிவாதிக்கு வட்டிக்குதான் பணம் கொடுத்தேன் என்றும் முதல் பத்திரத்தில் கொடுத்த பணத்திற்கு கூறிய வட்டியை சேர்த்து 2வது கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றும் அதனால் தாவா கிரய ஒப்பந்த பத்திரம் பெயரளவில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கிரயம் பேசி கிரய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டிருந்தால் புதிதாக தாவா ஒப்பந்த பத்திரம் எழுதப்படாமல் நேரடியாக கூடுதல் தொகை கொடுத்து கிரயம் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் செய்து கொள்ளலாம் என்று சொன்னேன் அதற்கு பிரதிவாதி வீட்டில் கேட்டுப்பார்த்து 11வது மாதம் கிரயம் செய்து கொடுப்பதாக சொன்னார். கிரய ஒப்பந்த பத்திரத்தில் யார் யார் சாட்சிகளாக இருந்தார்கள் மாதையன், தேவன் ஆகியோர்கள் இருந்தார்கள். கிரய ஒப்பந்த பத்திரம் எழுதும்போது பிரதிவாதியும் அவரது மனைவியும் இருந்தார்கள்

என்றும் நான் அவர்களிடம் சாட்சி கையெழுத்து வாங்காமல் மற்றவர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த 2 நபர்களையும் பிரதிவாதிதான் அழைத்து வந்தார். என் தரப்பில் நான் ஏன் சாட்சி வைக்கவில்லை என்றால் இதே சாட்சி போதும் என்று நினைத்தேன். முதல் ஒப்பந்த பத்திரத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் நினைவில்லை. ஆனால் மேற்படி சாட்சிகளையும் பிரதிவாதிதான் அழைத்து வந்தார். இதிலிருந்தே நான் சொத்தை வாங்க வேண்டும் என்று எண்ணத்தில் இல்லை என்றும் பெயரளவில் கடனுக்காக கிரய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் நிலத்தை வாங்க தயாராக இருந்தேன், தற்போதும் தயாராகதான் இருக்கிறேன். கிரய ஒப்பந்தம் கடனுக்காகதான் எழுதப்பட்டது என்றும் நான் கிரயம் பெற வேண்டும் என்பதற்காக எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் நிதி ஆதாரம் அதிகம் உள்ளது என்றும் எனவே சொற்ப ரூ.2,00,000/- ஐ செலுத்த 11 மாத கால அவகாசம் கொடுத்தது என்பது கடனுக்காகதான் கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்பதை நிரூபிக்கிறது என்றால் சரியல்ல. கால அவகாசம் நான் கொடுக்கவில்லை. முதல் கிரய ஒப்பந்தத்தில் 11 மாத கால அவகாசம் கொடுத்து, மீண்டும் கிரய தொகை சேர்த்து தரவேண்டும் என்று பிரதிவாதி கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி மீண்டும் 11 மாத கால அவகாசம் கேட்டு

நான் கொடுத்ததாக சொல்வது தவறு என்றும் கடன் தொகைக்காகதான் கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. கடனுக்காகதான் கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றும், தற்போது கிரயத்திற்காக நான் தாவா தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.